[1st November 1962

*1026 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பர்ரா—

(அ) மே மாதம் 15-ம் தேதி முடிய முதியோர் பென்ஷன் கோரி எத்தனை விண்ணப்பங்கள் வந்தன, மாவட்டவாரியாக ?

(இ) விண்ணப்பங்களை பரிசீலனை செய்ய விசேஷ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்களா ? விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKATAVATSALAM : ( ) & (இ) A paper [a] is placed on the table of the House.

*1027 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of old age pension applications received in the Dharmapuri Constituency till the end of June 1962; and

(b) the number sanctioned and the amount disbursed ?

TH-E HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 1,433.

(b) 141 and Rs. 796.04 (Rupees seven hundred and ninety six and naye paise four only).

* 1028 Q.—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the list of persons entitled to old age pension has been prepared and published in each district ; and

(b) the total number of persons entitled to old age pension in the Kanyakumari district ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Ninety-two persons have been granted old age pension till 30th June 1962.

SRI M. WILLIAM : In the case of Kanyakumari District, may I know the total number of applications received so far ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : In Kanyakumari District, the total number of applications received were 5,188.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : சென்ற மாதம் இந்தப் பென்ஷன் பெற்றவர்களுக்கு ரூ. 40 வந்தது. அது தீபாவளி போனசா அல்லது அடுத்த மாதத்திற்கும் சேர்த்து அனுப்பப் பட்டுள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரூ. 40 அனுப்பப்பட்டிருந்தால், இரண்டு மாதத்திற்குச் சேர்த்து அனுப்பித்திருப்பார்கள்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : தர்மபுரித் தொகுதியில் ஆயிரத்துச் சொச்சம் மனுக்கள் வந்தும், சுமார் நூற்று சொச்சம் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, பணம் பட்டுவாடா செய்யப்பட்டதாக

a Printed as Appendix I on page 437–438.

1st November 1962]

கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதில் காலதாமதம் ஏற்படுவதினாலே இதைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் உத்திரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சேலம் ஜில்லாவில் மொத்தம் 19,00-க்கு மேற்பட்ட மனுக்கள் வந்தன. இதிலே பென்ஷன் சாங்ஷன் செய்யப்பட்டது 1,778. ரிஜெக்ட் செய்யப்பட்ட மனுக்கள் 2,618. ஆகவே இவற்றை எல்லாம் பரிசீலனை செய்வதற்குக் காலதாமதம் ஆகிறது. புதிதாக "ஸ்டாப்" கொடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரத்தில் பரிசீலனை செய்ய முடியுமோ அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : வயது நிர்ணயம் எந்த அடிப்படையில் செய்யப்பட்டு வருகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப் பற்றி இங்கு முன்பே விடையளிக்கப் பட்டிருக்கிறது.

திரு. வீ. ராமனுதன் : இப்பொழுது தாசில்தார் மூலமாக இந்த உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொது மக்களிடத்தில் அதிக தொடர்புள்ள பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொது மக்கள் தொடர்புக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நன்றாகப் பார்த்து, நிலைமையை உணர்ந்து, முடிவு செய்கின்ற ஒரு தகுதிதான் வேண்டும்.

திரு. ஜே. மாதா கவுடர் : நீலகிரி ஜில்லாவிலே சுமார் 1,620 விண்ணப்பங்கள் வந்தும், 130 விண்ணப்பங்கள் தான் தீர்க்கப் பட்டிருக்கின்றன. இவைகளிலே எத்தனை மனுக்கள் ரிஜெக்ட் செய்யப்பட்டன ? எத்தனை மனுக்கள் இன்னும் பரிசிலனையில் இருக்கின்றன.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரிஜெக்ட் செய்யப்பட்ட மனுக்கள் 691. மீதி கணக்குப் பார்த்துக் கொள்ளலாம். பாக்கி மனுக்கள் பரிசிலனையில் இருக்கின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தத் திட்டம் வந்த பிறகு இது முதல் ஆண்டாக இருந்தால், ஜனங்கள் இதைப் புரிந்து கொள்ளாமல் மனுச் செய்வதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மீண்டும் மனுச் செய்து கொள்வதற்கு சர்க்கார் அனுமதி கொடுப்பார்களா ?

கனம் திரு. எம் பக்தவத்சலம் : இன்னும் மனுச் செய்து கொள்கிறவர் மனுச் செய்து கொண்டால், விதிகளின்படி அவை பரிசிலனை செய்யப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : நீலகிரி ஜில்லாவில் மொத்தம் வந்த மனுக்களில் 130 மனுக்களின் மீது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள விண்ணப்பங்களின் பரிசிலனை எப்பொழுது முடியும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேறு ஜில்லாக்களின் நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தால், நீலகிரியிலே விண்ணப்பங்கள் துரிதமாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன என்பது

தெரியும். கன்4யாகுமரி ஜில்லாவில் மொத்தம் வந்த மனுக்கள் 5,188. இவற்றில் 903 மனுக்கள் ரிஜெக்ட் செய்யப்பட்டன. 181 மனுக்கள் தான் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கின்றன. கோயம் புத்தூர் ஜில்லாவிலே 22,085 மனுக்கள் வந்ததில், 4,186 மனுக்கள் ரிஜெக்ட் செய்யப்பட்டன. 1,140 மனுக்கள் பரிசீலனை செய்யப் பட்டு பென்ஷன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த விதிகள் புதிதாக இருப்பதாலும், முதல் இரண்டு மாதங்களில் போதிய ஸ்டாப் இல்லாததினாலும், துரிதமாகப் பரிசீலனை செய்வதில் காலதாமதம் ஏற்பட்டு விட்டது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : காலவரையறை இல்லாமல் மனுக்கள் வாங்குவதற்குச் சர்க்கார் உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதிதாக மனுக்கள் வந்தால் விதிகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

திரு. எஸ். முத்துலிங்கம் : முதியோர் பென்ஷன் தொகைக்காக மனு செய்து கொள்கிறவர்கள் வயதை ருசுப்பிக்க ஸெர்டிபிகேட் கொடுக்க வேண்டியிருப்பதாலும், டாக்டர்களிடம் போனால், பணமில்லாமல் செர்டிபிகேட் வாங்க முடியாமல் இருப்பதாலும், இதற்கு அரசாங்கம் ஏதாவது வழி செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விதிகளின்படி ஸெர்டிபிகேட் வாங்குவதிலே கஷ்டம் இருக்கிறது என்றால், கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட கேஸ்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் மேற்கொண்டு என்ன செய்யலாமென்பதைப் பற்றி அரசாங்கம் யோசிக்கும்.

திரு. மு. பொ. வடிவேல் : இளம் மனைவிமார்களால் விரட்டி யடிக்கப்பட்ட முதிய கணவன்மார்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பார்களா (சிரிப்பு).

கனம் திரு எம். பக்தவத்சலம் : எந்தெந்த விதிகளின்படி இந்தப் பென்ஷன் வழங்கப்படுகிறது என்பதை கனம் அங்கத் தினர்கள் கவனித்துப் பார்த்து, அதற்குமேல் விதிகளை மாற்ற வேண்டுமென்றால், இதைப் பற்றி தனியாக யோசனை செய்யலாம்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : பல முதியோர் குருடர் களாக இருந்தும், அவர்கள் வறியர் அல்ல என்று பதில் வந்திருக் கிறது. அப்பேர்பட்டவர்கள் மேலும் மனுச் செய்து கொண்டால் அவற்றைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சர்க்கார் உத்தர விடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே விதிகளின்படி இவையெல்லாம் கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படு மென்று சொன்னேன். கனம் அங்கத்தினர் ஏதாவது "ஹார்டு" கேஸ்களை எனக்குத் தெரிவித்தால் மேலும் பரிசீலனை செய்து விதிகளை மாற்றுவதைக் குறித்து யோசனை செய்யலாம்.